# கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம்
# வழங்கும்
# தமிழ் நாவல்களுக்கான
# திருமதி ரங்கம்மாள் பரிசு

## விதிமுறைகள்

1. இரண்டாண்டுக்கு ஒரு முறை பரிசுப்போட்டி நடத்தப்படும்.

2. இந்தியாவில் பிரசுரம் செய்யப்பட்டு, புத்தக வடிவில் வெளிவந்திருக்கும் சிறந்த நாவலுக்கு ரொக்கப் பரிசு அளிக்கப்படும்.

3. சிறந்தது என்று தேர்ந்து எடுக்கப்படும் தமிழ் நாவலுக்கு ரொக்கப் பரிசுத்தொகையில் 80% நாவலாசிரியருக்கும், 20% நாவலை வெளியிட்ட பதிப்பகத்தாருக்கும் பகிர்ந்து அளிக்கப்படும்.

4. நாவல்கள் அச்சிடப்பெற்று புத்தக வடிவில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் கையெழுத்துப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

5. நாவல்கள் சொந்தக் கற்பனையாகவே இருத்தல் மிக அவசியம். மொழி பெயர்ப்புகளாகவோ, தழுவல்களாகவோ இருத்தல் கூடாது.

6. மறைந்த எழுத்தாளர்களின் நாவல்கள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. இத்திட்டத்தில் பங்கு பெற விரும்பும் எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் வெளியிடப்பட்ட நாவலின் அச்சிட்ட நான்கு பிரதிகளை போட்டிக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பிய பிரதிகளை எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்ப இயலாது.

8. போட்டிக்கு வரும் நாவல்களில் சிறந்த நாவலைத் தேர்ந்தெடுக்க மூன்று பேர்கள் கொண்ட நடுவர் குழுவை கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம் நியமனம் செய்யும்.

9. இப்போட்டியில் அறநிலையைச் சார்ந்தவர்களின் நாவல்களோ, நடுவர்களின் நாவல்களோ பங்குபெற ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

10. நடுவர் குழுவின் பெரும்பான்மைத் தீர்ப்பையொட்டி, அறநிலைய செயற்குழு பரிசுக்குரிய நாவலை முடிவு செய்யும்.

11. இப்பரிசுத்திட்டம் பற்றிய எந்தவிதமான கடிதத் தொடர்பும், போட்டியில் கலந்து கொண்டபின் தவிர்க்கப்படல் வேண்டும்.

12. இப்பரிசுத்திட்டம் பற்றிய அனைத்து நடைமுறைகளிலும் அறநிலையச் செயற்குழுவின் முடிவே இறுதியானதாகும். இவை எந்த ஒரு நீதி மன்றத்திலும் கேள்விக்குரியதாகவோ, சர்ச்சைக்குரியதாகவோ செய்யப்படத்தக்கது அல்ல.

13. மேற்கூறிய விதிகளைத் திருத்தவோ, மாற்றவோ புதிய விதிகளை சேர்க்கவோ, அறநிலையச் செயற்குழுவிற்கு முழு அதிகாரம் உண்டு.

நிர்வாக அறங்காவலர்
கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம்
கலை மையம்
அவனாசி சாலை, விமான நிலையம் அஞ்சல்
கோயமுத்தூர் - 641 014.
தொலைபேசி எண்: 0422-2574110.
Website: kasthurisreenivasanartgallery.com
E.Mail: kst.cuturecentre@gmail.com

**குறிப்பு: 2015, 2016ம் ஆண்டுகளில் வெளிவந்த நாவல்களின் பரிசுப்போட்டியில் கலந்து கொண்டவற்றில் சிறந்த நாவலுக்கு ரூ.37500/- பரிசு வழங்கப்பட்டது.**